[1987 நவம்பர் 13

மிதி வண்டிகளுக்குக் கட்டணம்.

90— (*வினா எண்—12622) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நகராட்சி, ஊராட்சிகளில் மிதி வண்டிகளுக்குக் கட்டணம் வாங்குவது நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—4—1973 முதல் தமிழகத்திலுள்ள எல்லா நகராட்சிகள் மற்றும் நகராட்சி, நகரியங்களின் எல்லைகளுக்குள் மிதி வண்டிகளுக்கு வரி விதிப்பது நிரந்தரமாக ரத்து செய்ய அனைத்து நகர் மன்றங்கள் மற்றும் நகராட்சி நகரியக் குழுக்களுக்கு அரசாணை எண் 527, ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் : 23—3—1973-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் மிதி வண்டிகள் மீதான வரியைக் கைவிடுவது பற்றிய கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் ஊரக வளர்ச்சித் துறையில் இல்லை.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற மிதி வண்டிகளுக்கு நகராட்சிகளில் கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிட்டு ஊராட்சிகளில் கட்டணம் வசூலிப்பது என்பது உண்மையிலேயே பொருந்தாத நிலை. ஆகவே, கிராமப்புறங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அந்த நிலையிலே ஊராட்சி ஒன்றியங்களிலும் மிதி வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிப்பது நிறுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன். அதோடு இன்றைய சூழ்நிலையில் ஒரு சில ஊராட்சிகளில் அதை வசூல் செய்கிறார்கள், ஒரு சில ஊராட்சிகளில் அதை வசூல் செய்யாமல் இருக்கிறார்கள். அந்த நிலையையும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இவற்றை எல்லாம் ரத்து செய்து 1973 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்தபோது ஏன் ஊராட்சிப் பகுதிகளை விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இப்போது இந்த ஊராட்சிப் பகுதிகளில் இதை ரத்து செய்யலாமா என்று அரசு கேட்ட நேரத்தில் இதிலே பெரிய அளவுக்கு வருமானம் இருக்கிறது ; வேறு வருமானம் இந்தச் சிறிய ஊராட்சிப் பகுதிகளுக்கு இல்லை என்று அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்தந்த ஊராட்சிகள் விரும்பினால், அவர்களுடைய நிதி நிலைமை சரியாக இருந்தால், அவர்கள் அரசிடத்திலே கடனோ, மானியமோ கேட்கக்கூடாத ஒரு சூழ்நிலையில் இருந்

1987 நவம்பர் 13]

தால் ரத்து செய்யலாம் என்று விதி இருக்கிறது. அப்படி வசதி இருக்கின்ற ஊராட்சிகள் தாங்களாகவே ரத்து செய்து கொள்வதிலே அரசுக்கு ஆட்சேபணை இல்லை. இருந்தாலும் நகர்ப்புற பகுதிகளிலே இந்த வரிகளை எல்லாம் ரத்து செய்து இருக்கிற போது சாதாரண ஏழை மக்கள் வாழ்கிற கிராமப்புறப் பகுதிகளிலும் இதை ரத்து செய்து இருக்க வேண்டும். உடனடியாக அரசு இதிலே கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. புஷ்பராகு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிப் பகுதிகளில் மிதி வண்டிகளுக்குச் சட்டணம் வாங்குவதை நிறுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமென்று அமைச்சரவர்களும் சொன்னார்கள். உண்மையிலேயே மகிழ்ச்சி. அதே நேரத்தில் கிராமப்புறங்களில் மாடுகள் பூட்டிய வண்டிகளுக்கும் இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதையும் நிறுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு எது எது உதவியாக இருக்குமோ, அந்த அடிப்படையில் இதைப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிதி வண்டிகளுக்கு ஊராட்சிகளில் எவ்வளவு வரி வசூலிக்கப்படுகிறது? இப்போது மத்திய அரசாங்கத்தில் மோட்டார் வெஹிகிள்ஸ் டேக்சேஷன் ஆக்டைத் திருத்தி, 'மோட்டார் டேக்சஸ் ஒன் டைம் பேமெண்டாக, வாங்குவது போல, குறைந்தபட்சம் ஊராட்சிகளின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, 5 ஆண்டுகளுக்கு வாகனம் வாங்கும்போதே மொத்தமாக வரியை வசூலிப்பது பற்றிப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சி சட்டத்தின் 105-ஆவது விதியின் கீழ் அரை ஆண்டுக்கு ரூ. 4-க்கு மேற்படாமல் வரியாக விதிக்கப்படலாம் என்று இருந்திருக்கிறது. அதைத்தான் ரத்து செய்திருக்கிறார்கள். அதையொட்டி இன்றைக்கு ஊராட்சிகளுக்கும் ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் வரி விதிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் வரி விதிக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் வரி விதிப்பது என்பதே கஷ்டமான காரியம். அது ஒரு ரூபாயாக இருந்தாலும் சரி,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அல்லது இரண்டு ரூபாயாக இருந்தாலும் சரி. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரிவாங்குவதை வாகனம் வாங்கும்போது வசூலிப்பதா அல்லது வரி வாங்கும்போது வசூலிப்பதா என்பது பிரச்சினை. இது நடைமுறைகளுக்கு உகந்த காரியமல்ல. கொஞ்சம் கொஞ்சமாக, சிறுகச் சிறுக வரி வாங்குவது, வரி விதிப்பிற்கே ஒரு இலக்கணமாகும்.

ஆலந்தூர் சாலை தரைப்பாலம்.

91—(* வினா எண் 13403)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் சாலை தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றி அமைக்க பணிகள் கால தாமதம் ஆகக் காரணம் என்ன?

(ஆ) பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை மாநகராட்சியின் 300-வது ஆண்டு விழாவை ஒட்டி ஆலந்தூர் சாலை தரைப் பாலத்திற்கு மாறாக உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கான திட்டம் தோராயமாக ரூ. 200 இலட்சத்துக்கு மதிப்பிடப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்கு சென்னை மாநகராட்சி அரசுக்கு எழுதியுள்ளது. இது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு நிதி ஒதுக்கீடு செய்த பின்பு இப்பணி தொடங்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனையை விரைந்து முடித்து, 300-வது ஆண்டில் அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும், அந்தச் சாலை மிக முக்கியமான கிண்டி தொழிற் பேட்டையை இணைக்கின்ற சாலையாக இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு நாளைக்கு 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஜாபர்கான் பேட்டை தரைப் பாலத்தையும், ஆலந்தூர் சாலையையும் இணைக்கின்ற இரண்டு தரைப் பாலங்களும் மழைக் காலங்களில் செல்லமுடியாத நிலையிருக்கிறது. எனவே அதைக் கருத்திற்கொண்டு, 300-வது ஆண்டில் பரிசீலனை என்ற அளவில் இல்லாமல் கொள்கை முடிவாக எடுத்து, நடவடிக்கை எடுப்பார்களா?